ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ தீதறு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தீதறு ॥

## திருநந்திபுர விண்ணகரம்

‡தீதறு நிலத்தொடெரி காலினொடு⋆ நீர் கெழு
விசும்பும் அவையாய்⋆
மாசறு மனத்தினொடுறக்கமொடிறக்கை⋆
அவையாய பெருமான்⋆
தாய் செற உளைந்து தயிர் உண்டு குடம் ஆடு⋆
தடமார்வர் தகை சேர்⋆
நாதன் உறைகின்ற நகர்⋆ நந்திபுர விண்ணகரம்
நண்ணு மனமே (1)

உய்யும் வகை உண்டு சொன செய்யில்⋆ உலகேழும்
ஒழியாமை முனநாள்⋆
மெய்யின் அளவே அமுது செய்ய வல⋆
ஐயன் அவன் மேவு நகர் தான்⋆
மைய வரி வண்டு மதுவுண்டு கிளையோடு⋆
மலர் கிண்டி அதன்மேல்⋆
நைவளம் நவிற்று பொழில்⋆ நந்திபுர விண்ணகரம்
நண்ணு மனமே (2)

உம்பர் உலகேழு கடல் ஏழு மலை ஏழும்⋆
ஒழியாமை முன நாள்⋆
தம் பொன் வயிறார் அளவும் உண்டவை உமிழ்ந்த⋆
தடமார்வர் தகை சேர்⋆
வம்பு மலர்கின்ற பொழில்⋆ பைம் பொன் வரு தும்பிமணி
கங்குல் வயல் சூழ்⋆
நம்பன் உறைகின்ற நகர்⋆ நந்திபுர விண்ணகரம்
நண்ணு மனமே (3)

www.prapatti.com

பிறையின் ஒளி எயிறிலக முறுகி எதிர் பொருதும் என⋆
 வந்த அசுரர்⋆
இறைகள் அவை நெறு நெறென வெறிய அவர் வயிறழல⋆
 நின்ற பெருமான்⋆
சிறை கொள் மயில் குயில் பயில மலர்கள் உக அளி முரல⋆
 அடிகொள் நெடு மா⋆
நறைசெய் பொழில் மழை தவழும்⋆ நந்திபுர விண்ணகரம்
 நண்ணு மனமே (4)

மூளவெரி சிந்தி முனிவெய்தி அமர் செய்தும் என⋆
 வந்த அசுரர்⋆
தோளும் அவர் தாளும் முடியோடு பொடியாக⋆
 நொடியாம் அளவெய்தான்⋆
வாளும் வரி வில்லும் வளை ஆழி கதை சங்கம்
 இவை⋆ அங்கை உடையான்⋆
நாளும் உறைகின்ற நகர்⋆ நந்திபுர விண்ணகரம்
 நண்ணு மனமே (5)

தம்பியொடு தாம் ஒருவர் தன் துணைவி காதல்⋆
 துணையாக முன நாள்⋆
வெம்பியெரி கானகம் உலாவும் அவர் தாம்⋆
 இனிது மேவு நகர் தான்⋆
கொம்பு குதி கொண்டு குயில் கூவ மயில் ஆலும்⋆
 எழில் ஆர் புறவு சேர்⋆
நம்பி உறைகின்ற நகர்⋆ நந்திபுர விண்ணகரம்
 நண்ணு மனமே (6)

தந்தை மனம் உந்து துயர் நந்த இருள் வந்த விறல்⋆
 நந்தன் மதலை⋆
எந்தை இவன் என்றமரர் கந்த மலர் கொண்டு தொழ⋆
 நின்ற நகர் தான்⋆
மந்த முழவோசை மழை ஆக எழு கார்⋆
 மயில்களாடு பொழில் சூழ்⋆

நந்தி பணிசெய்த நகர்⋆ நந்திபுர விண்ணகரம்
நண்ணு மனமே (7)

எண்ணில் நினைவெய்தி இனி இல்லை இறை என்று⋆
முனியாளர் திருவார்⋆
பண்ணில் மலி கீதமொடு பாடி அவர் ஆடலொடு⋆
கூட எழிலார்⋆
மண்ணில் இது போல நகர் இல்லை என⋆
வானவர்கள் தாம் மலர்கள் தூய்⋆
நண்ணி உறைகின்ற நகர்⋆ நந்திபுர விண்ணகரம்
நண்ணு மனமே (8)

வங்க மலி பௌவம் அது மா முகடின் உச்சி புக⋆
மிக்க பெருநீர்⋆
அங்கம் அழியார் அவனதாணை தலை சூடும்⋆
அடியார் அறிதியேல்⋆
பொங்கு புனல் உந்து மணி கங்குல் இருள் சீறும் ஒளி⋆
எங்கும் உளதால்⋆
நங்கள் பெருமான் உறையும்⋆ நந்திபுர விண்ணகரம்
நண்ணு மனமே (9)

‡நறை செய் பொழில் மழை தவழும்⋆ நந்திபுர விண்ணகரம்
நண்ணி உறையும்⋆
உறை கொள் புகர் ஆழி சுரி சங்கம் அவை⋆
அங்கையுடையானை⋆ ஒளி சேர்
கறை வளரும் வேல் வல்ல⋆ கலியன் ஒலி மாலை இவை
ஐந்தும் ஐந்தும்⋆
முறையின் இவை பயில வல அடியவர்கள் கொடு வினைகள்⋆
முழுதகலுமே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥